**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.257 /2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜாராம் | த–பெ | முத்துராமலிங்கம் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 63/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆவின் (ஓய்வு) | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2026**

---------------------------------------------------------------------------------------------------

**11.06.2026**
**கூடுதல் நிரூபண வாக்குமூலம்**
**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை கூடுதல் நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன்.

கடந்த 01.06.2026 ல் புகார்தாரர் சேமிப்பு கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, காரைக்குடி கிளையின் **01.04.2020 முதல் 31.03.2024 வரையிலான வரவு செலவிற்கான வங்கி ஸ்டேட்மெண்ட் ம.சா.ஆ.5 ஆகும்.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) ஆவினில் இருந்து நான் பெற்ற தொகைகளை காண்பிப்பதற்கு ம.சா.ஆ.5 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி 23.06.2023 என்றால் சரிதான். 07.06.2023 முதல் 30.06.2023 வரை எனது வங்கி கணக்கில் ரூ7,702/– இருந்தது என்றால்

சரிதான், அதற்கு முன்பு 01.05.2020 ல் இருந்து சுமார் 15 லட்சம் வங்கியில் வைத்துள்ளேன். எதிரி என்னிடம் பணம் கேட்ட காலக்கட்டத்தில் எனது வங்கியில் அதிக தொகை இருந்ததில்லை என்றால் சரிதான், பணத்தை எடுத்து வைத்திருந்தேன். 2020 ல் இருந்து சிறிது சிறிதாக வங்கியில் இருந்து எடுத்து வைத்திருந்த பணத்தைத்தான் எதிரிக்கு கடனாக கொடுத்தேன் என்றால் சரிதான். ஓய்வு ஊதியத்தில் சுமார் ரூ.30,00,000/– பெற்றதாக ம.சா.ஆ.5 ல் எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல, 15,00,000/–, 5,00,000/– மற்றும் 5,00,000/– மற்றும் 7,00,000/– கொடுத்துள்ளார்கள். 3 நாட்கள் முன்பே பணம் கேட்டிருக்கும்பட்சத்தில் எதற்காக நேரடியாக வங்கி மூலம் எதிரிக்கு பணம் கொடுகக்வில்லை என்றால் வீட்டு வேலைக்காக ரொக்கமாக வைத்திருந்தேன் அதை கொடுத்தேன். வீட்டு பராமரிப்பிற்காக ரொக்கமாக வைத்திருந்தேன் என்றால் சரிதான். வீட்டு பராமரிப்பு தொடர்பான ரசீது என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் ரொக்கமாக பணம் இருந்ததில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, எதிரியின் கணவர்தான் என்னிடம் இருந்து பணம் பெற்றார் என்றாலும், அப்போது கையொப்பம் மட்டும் செய்து பூர்த்தி செய்யாத எதிரியின் காசோலையை பெற்றுக்கொண்டேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.11 05:15:36 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், , காரைக்குடி.